ஊராட்சி மன்றத் தலைவர், வேம்பார்பட்டி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: ஆர்.கந்தசாமி

ந.க.எண்.03/2023/ஊ1 நாள்28.02.2024

பொருள் : மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் கிழக்கு வட்டம் - சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் - வேம்பார்பட்டி ஊராட்சி, வேம்பார்பட்டி கிராமம் - சர்வே எண்: 254/19-ல் 1.05 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்தி நகர் ஊரமைப்பு துறையினரால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - மனைக்கு கட்டணங்கள் செலுத்தி வரன்முறை செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளது - வரன்முறைப்படுத்தி உத்தரவிடல்.

பார்வை : 1. அரசாணை நிலை எண் : 78 மற்றும் 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.2017

2. அரசாணை நிலை எண் : 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 13.10.2017

3. நகர் ஊரமைப்பு இயக்குநர் , திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்:XLBU4W63/2023/TCP, நாள்:09.01.2024.

4. திரு.ஜி.வைரவன்
விண்ணப்பம் நாள் : 13.01.2024.

உத்தரவு:

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேம்பார்பட்டி ஊராட்சி, வேம்பார்பட்டி கிராமம், சர்வே எண்: 254/19-ல் 1.05 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 24 மனைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணைகளின்படி வரன்முறை செய்யுமாறு மேற்படி மனைப்பிரிவின் உரிமையாளரான திரு.ஜி.வைரவன், திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு விண்ணப்பித்திருந்தார்.

இவருடைய விண்ணப்பத்தைப் பரிசீலித்த திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் பார்வை 3-ல் காணும் கடிதம் வாயிலாக மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சிக்கான கூறாய்வு கட்டணம் ரூ.6600/- (ரூபாய் ஆறாயிரத்தி அறுநூறு மட்டும்) விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்று கட்டணமாக 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை பெற்றுக் கொண்டு உள்ளாட்சி நிறுவனமே வரன்முறைப்படுத்தி கொள்ள தொழில் நுட்ப அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார்.

அதன்பிரகாரம் மனைப்பிரிவில் மொத்தம் உள்ள 18 மனைகள் அடங்கிய 1.05 ஏக்கர் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு தொகை ரூ.301565/-(ரூபாய் மூன்று லட்சத்தி ஆயிரத்தி ஐநூற்றி அறுபத்தி ஐந்து மட்டும்) உரிய அரசு தலைப்பில் 05.02.2024 அன்று செலுத்தி 24 மனைகளையும் வரன்முறை செய்து உத்தரவு வழங்குமாறும் பார்வை 4-இல் காணும் விண்ணப்பத்தில் நிலப்பிரிவு உரிமையாளர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் தொழில் நுட்ப அனுமதி வழங்கிய திண்டுக்கல், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விதித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 4 வரை மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 24 வரை அடங்கியுள்ள அனைத்து நிபந்தனைகளையும் தவறாது கடைபிடிப்போம் என்று வேம்பார்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களுக்கு உறுதி மொழிப்பத்திரம் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்கண்ட பத்தி எண் 2 மற்றும் 3-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களை கூராய்வு செய்து அதனை ஏற்று வேம்பார்பட்டி ஊராட்சி, வேம்பார்பட்டி கிராமம், சர்வே எண்: 254/19-இல் 1.05 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 18 மனைகள் மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி இதன் மூலம் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 78 மற்றும் 79 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள் : 04.05.17 மற்றும் அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017ல் கண்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகள் அனைத்தும் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் கட்டுப்படுத்தும் என்றும் வழிகாட்டு நெறிமுறைகள் மீறியதாக கருதப்பட்டால் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் உடனடியாக ரத்து செய்யப்படும்.

2. மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் உத்தரவு ந.க.எண்:8266/2018 மம3, நாள்:30.04.2019-ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 4 வரை மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 24 வரை அடங்கியுள்ள அனைத்து ஷரத்துகளும் இம்மனைப்பிரிவு அங்கீகாரத்தை கட்டுப்படுத்தும் எனவும் பிற்காலங்களில் மேற்கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டதாக தெரியவரும் பட்சத்தில் இம் மனைப்பிரிவு அங்கீகாரம் உடனடியாக ரத்து செய்யப்படும்.

3. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு கொள்கை அளவில் (In principle approval Layout Frame work) ஒப்புதல் மட்டும் அளிக்கப்படுகிறது. அரசாணை 78 பிரிவு 5(4) மற்றும் அரசாணை எண் 172 பிரிவு 7G(i).

4. நில உரிமை குறித்து நில உரிமையாளர் தற்போது சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் திருப்தியளிக்கும் வகையில் உள்ளதாகக் கருதப்பட்டு இந்த வரன்முறை உத்தரவு வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் தவறுகள் கண்டறியப்படின் இவ்வுத்தரவு உடனடியாக இரத்து செய்யப்பட்டு அவர்மீது சட்டரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. அனுமதியற்ற மனைப்பிரிவு இடத்திற்கு நீதிமன்ற ஆட்சேபனை மற்றும் சட்டப்பூர்வமான புகார் மற்றும் வில்லங்கம் தெரியப்படின் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் நகர் ஊரமைப்புத்துறையினரின் ஆய்வுக்குட்பட்டு இந்த ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

7. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட இடங்களை வரன்முறை செய்வது குறித்து அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்,
வேம்பார்பட்டி ஊராட்சி
சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர் :

திரு.ஜி.வைரவன, விவேகானந்த நகர், திண்டுக்கல் .

நகல்

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), திண்டுக்கல் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர்-, திண்டுக்கல்
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், சாணார்பட்டி
4. சார்பதிவாளர், சாணார்பட்டி.

மனைப்பிரிவு வரன் முறைப்படுத்துதல்

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் வெம்பார்பட்டி ஊராட்சி வெம்பார்பட்டி கிராமம் சர்வே எண் 254/19 இல் 1.05 ஏக்கர் மனையில் 4250 சதுர மீட்டர் மனைப்பிரிவு வழங்க நான் வரைமைப்பு அலுவலர் திண்டுக்கல் அவர்களின் கடிதம் எண் ந.க. எண் XL6U4W63/2023 TCP நாள் 9.1.2024 இன் படி அனுமதி வரப் பெற்றதை தொடர்ந்து வெம்பார்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க. எண் 04/2023/ஊ1 நாள் 28.2.2024 இன் படி மனைப்பிரிவுகள் மனைப்பிரிவு எண் 1 முதல் 18 மனைகளுக்கு வரன் முறைப்படுத்தி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

PRESIDENT
Vembarpatty Panchayat
Shanarpatty Panchayat Union